**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை: திரு. P. மகேந்திர வர்மா, B.A., B.L.,**
**சார்பு நீதிபதி, சங்கரன்கோவில்**

**2026-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28-ஆம் நாள் சனிக் கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 14 ஆம் நாள்)**

**இடைநிலை மனு எண்.01/2025**
**உள்**
**அசல் வழக்கு எண்.201/2018**

ஜெயகீதாமணி .. மனுதார்/1ம் பிரதிவாதி

/எதிர்/

1. புஷ்பலதா ... எதிர்மனுதார்/வாதி

2. கிளை மேலாளர்,
எல்.ஐ.சி ஆப் இந்தியா,
உடுமலைபேட்டை

3. மேலாளர் (L & HPF)
எல்.ஐ.சி ஆப் இந்தியா,
ரீஜினல் ஆபிஸ், கோயம்புத்தூர் ... எதிர்மனுதார்கள்/2, 3 பிரதிவாதிகள்

இம்மனுவானது 13.02.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது, மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு. M.ஆனந்த் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்.என்.அருணாச்சலம் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் ஆர்.எஸ்.எஸ்.பிரதாப்ராஜ்

அவர்கள் ஆஜராகியும் வரப்பெற்ற இம்மனுவில் இரு தரப்பிலும் முன்னிடப்பட்டிருக்கும் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த மனுவில், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உ த் த ர வு

இந்த மனுவானது, உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 7 விதி 11(a) மற்றும் பிரிவு 11 சி.பி.சியின் கீழ் வழக்குரையை நிராகரித்து உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**:

மனுதாரர் அசல் வழக்கில் 1 ஆம் பிரதிவாதியாவார். 1 ஆம் எதிர்மனுதாரர் அசல் வழக்கினை பாகப்பிரிவினை பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளார். 1 ஆம் எதிர்மனுதாரர் மனுதாரரின் அத்தை ஆவார். 1 ஆம் எதிர்மனுதாரர் இந்த வழக்கினை வழக்கு மூலம் எதுவும் இல்லாமல் தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கானது காப்பீட்டு தொகையை பொருத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்குரையின்படி மனுதாரரின் கணவர் குணசேகர் 2 ஆம் எதிர்மனுதாரரிடமிருந்து காப்பீடு பெற்றுள்ளார். 2 ஆம் எதிர்மனுதாரரின் நிறுவனம் உடுமலைப்பேட்டையில் அமைந்துள்ளது. 2 ஆம் எதிர்மனுதாரரின் மேலதிகாரியான 3 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனம் கோயம்புத்தூரில் அமைந்துள்ளது. காப்பீடு சம்மந்தப்பட்ட நபர்கள் அனைவரும் இந்த நீதிமன்றத்தின் ஆள்வரையறைக்குள் இல்லை. எனவே இந்த வழக்கானது வழக்கு மூலம் இல்லாமல் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள வழக்குமூலம் தவறானது. எனவே இந்த வழக்குரை நிராகரிக்கப்படவேண்டும்.

3. **<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் தவறானவை. 1ஆம் எதிர்மனுதாரர்/வாதியை அலைக்கழிக்கவேண்டும் என இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இறந்துபோன 1ம் எதிர்மனுதாரரின் மகனுக்கு பூர்வீக ஊர் தலைவன்கோட்டை ஆகும். அது இந்நீதிமன்ற வரையறைக்கு உட்பட்டே வருகிறது. 1ம் எதிர்மனுதாரரின் மகன் தனது பணி நிமித்தமாக வெளிநாட்டில் இருந்து வந்த போதுதான் இறந்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர் தற்காலிகமாக உடுமலைப்பேட்டையில் வசித்து வந்தபோது 2ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பாலிசியை எடுத்துள்ளார். அதனால் 1ம் எதிர்மனுதாரரின் பூர்வீக ஊரான தலைவன்கோட்டை என்பதாலேயே 1ம் எதிர்மனுதாரர் தாவா வழக்கினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். 1ம் எதிர்மனுதாரரின் மகனின் பூர்வீக ஊரான தலைவன்கோட்டை இந்நீதிமன்ற பணவரையறைக்கு உட்பட்டு வருவதாலும், 1ம் எதிர்மனுதாரரின் மகன் வெளிநாட்டில் வைத்து இறந்துள்ளதாலும், இந்நீதிமன்றத்தில் இவ்வழக்கு செய்யப்பட்டுள்ளது. மேலும் 1ம் எதிர்மனுதாரரின் மகனின் பாஸ்போர்ட் உள்ளிட்ட ஆவணங்களிலும் அவரது பூர்வீக ஊரான தலைவன்கோட்டை என்பதே பதிவில் இருந்து வருகிறது. எனவே மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4. 3**<u>ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 2ம் எதிரிமனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் தவறானவை. இறந்துபோன ராஜகுணசேகர் என்பவர் காப்பீடு பாலிசியை உடுமலைப்பேட்டை கிளையிலிருந்து பெற்றுள்ளார். மேலும் ராஜகுணசேகர் முகவரி உடுமலைப்பேட்டையில் உள்ளதாக

குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணபரிவர்த்தனை வழங்கும் நிறுவனமானது உடுமலைபேட்டையில் அமைந்துள்ளதால் இந்த நீதிமன்றத்திற்கு ஆள்வரையறை கிடையாது. மேலும் காப்பீடு கோரும் தொகையானது பாலிசிதாரரால் பரிந்துரைக்கப்பட்டவரின் பெயருக்கு (nominee) செலுத்தப்பட்டுவிட்டது. மேற்படி பண பரிவர்த்தனை உடுமலைப்பேட்டையில் நடந்துள்ளதால் இந்த நீதிமன்றத்திற்கு ஆள்வரையறை கிடையாது. எனவே மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

5. இம்மனுவில் தீர்வு காணவேண்டிய விஷயம் யாதெனில்,

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா?

என்பதேயாகும்.

6. இரு தரப்பிலும் யாதொரு வாய்மொழி சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. இரு தரப்பும் கேட்கப்பட்டன. வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

7. **தீர்வு**:

இந்த மனுவானது, வழக்குரையை நிராகரிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. 1ஆம் எதிர்மனுதாரர்/வாதியால் அசல் வழக்கானது பாலிசி தொகையில் வாதிக்குரிய 1/2 பங்கு பாகத்தை 1ஆம் பிரதிவாதிக்கு பிரிவினை செய்து கொடுக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. **வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு** :-

வாதியின் மகனும் , 1ஆம் பிரதிவாதியின் கணவருமான ராஜகுணசேகர் என்பவர் HTC Building Networks என்ற தனியார் நிறுவனத்தில் Implementation Supervisor ஆக பணிபுரிந்து வந்தார். அந்த காலகட்டத்தில் 2 ஆம் பிரதிவாதி நிறுவனத்தில் ரூ.3,00,000/-த்திற்கு பாலிசி ஒன்றை எடுத்து தவணை தொகையை செலுத்தியுள்ளார். இந்நிலையில் கடந்த 13.06.2018 ஆம் தேதியன்று ராஜகுணசேகர் ஓமன் நாட்டிலுள்ள AL SUWAIQ ல் வைத்து காலமாகிவிட்டார். அவருக்கு வாதியும் 1ஆம் பிரதிவாதி மட்டுமே வாரிசுகள் ஆவார்கள். இந்நிலையில் பாலிசியில் 1ஆம் பிரதிவாதி பரிந்துரைக்கப்பட்டவராக (nominee) காட்டப்பட்டதை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு 1ஆம் பிரதிவாதி பாலிசி தொகை முழுவதையும் பெற்றுக்கொண்டார். உண்மையில் பாலிசிக்கு பரிந்துரைக்கப்பட்டவராக (nominee) நியமனம் செய்யப்பட்டிருந்தாலும் இறந்துபோனவரின் சட்டப்படி முதல் வகுப்பு வாரிசுதாரர்கள் பாலிசி தொகையை பெற்றுக்கொள்ள இயலும். எனவே பாலிசி தொகையில் பாதி தொகையை 1ஆம் பிரதிவாதி/வாதிக்கு பாகப்பிரிவினை செய்து கொடுக்கும் வகையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. தற்போது 1ஆம் எதிர்மனுதாரர்/வாதியின் மகனான ராஜகுணசேகர் உடுமலைபேட்டையிலுள்ள 2 ஆம் பிரதிவாதி காப்பீட்டு நிறுவனத்தில் பாலிசி பெற்றுள்ளார் என்றும், மேலும் 2ஆம் பிரதிவாதி நிறுவனத்தின் மேலதிகாரியான 3ஆம் பிரதிவாதி நிறுவனமானது கோயம்புத்தூரில் அமைந்துள்ளது என்றும், எனவே இந்த வழக்கினை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு வழக்குமூலம் கிடையாது என்றும், எனவே வழக்குரையை நிராகரிக்கவேண்டும் என இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10. மனுதாரர்/1ஆம் பிரதிவாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் வழக்குரையை நிராகரிக்கப்பட வேண்டுமா? என்பதை பொருத்து பரிசீலனை

செய்கையில், மனுதாரர்/1 ஆம் பிரதிவாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள ஒரே ஆட்சேபனை யாதெனில் இந்த வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்பதாகும். இதுசம்மந்தமாக வழக்குரையை பரிசீலனை செய்கையில், 1 ஆம் பிரதிவாதி தனது கணவரின் பாலிசி தொகை முழுவதையும் அவரது கணவரின் மற்றொரு சட்டப்படியான முதல் வகுப்பு வாரிசுதாரரான வாதிக்கு கொடுக்காமல் முழுவதுமாக பெற்றுக்கொண்டார் என்றும், மேற்படி பாலிசி தொகையில் சரிபாதி தொகையை வாதிக்கு பிரித்து தரவேண்டும் என்றும் சங்கதிகள் கூறப்பட்டு பாகப்பிரிவினைக்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் 1 ஆம் எதிர்மனுதாரர் /வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு வழக்குமூலம் உள்ளது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

11. அடுத்ததாக 1 ஆம் பிரதிவாதி உடுமலைப்பேட்டையில் வசித்து வருகிறார் என்றும், 1 ஆம் பிரதிவாதியின் கணவர் காப்பீடு பெற்ற 2 ஆம் பிரதிவாதியின் நிறுவனம் உடுமலைப்பேட்டையில் அமைந்துள்ளது என்றும், மேலும் 2 ஆம் பிரதிவாதி நிறுவனத்தின் மேலதிகாரி நிறுவனம் கோயம்புத்தூரில் அமைந்துள்ளது என்றும், எனவே இந்த நீதிமன்றத்திற்கு ஆள்வரையறை இல்லை என்பதால் இந்த வழக்கிற்கு வழக்குமூலம் கிடையாது என சொல்லப்பட்டுள்ளதை பொருத்து பரிசீலனை செய்கையில் இந்த நீதிமன்றத்திற்கு ஆள்வரை எல்லை (Territorial Jurisdiction) இல்லையென்றால் வழக்குரையை உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டி கட்டளை 7 விதி 10 இன் கீழ் திருப்பப்பட வேண்டுமே தவிர வழக்குரை நிராகரிக்கப்பட முடியாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

12. எனவே மேற்கண்ட பரிசீலனையிலிருந்து மனுதாரரால் இந்த வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்ற காரணத்திற்காக வழக்குரையை நிராகரிக்க கோரி

தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13. இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 28-ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MAHINDRAVARMA P
Digitally signed by MAHINDRAVARMA P
Date: 2026.03.28 20:17:08 -0300

சார்பு நீதிபதி,

சங்கரன்கோவில்.

**மனுதார் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

**எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

MAHINDRAVARMA P
Digitally signed by MAHINDRAVARMA P
Date: 2026.03.28 20:17:15 -0300

சார்பு நீதிபதி,

சங்கரன்கோவில்.

**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**இடைநிலை மனு எண்.01/2025**

**உள்**

**அசல் வழக்கு எண்.201/2018**

**உத்தரவு (அசல்/வரைவு)**

**நாள் 28.03.2026**